**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி</u>**

**அசல் வழக்கு எண். 15/2025**

2026ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய ஆனந்தி **DW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திரு. ராஜேஷ் கண்ணா, M.A., LL.M.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 16.07.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஆனந்தி** | | |
| Husband's Name | : **முருகன்** | Court | : |
| Village | : **செம்பனார்கோவில்** | Taluk | : **தரங்கம்பாடி** |
| Calling | : | | |
| Age | : 49/2026 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| **எண்.** | **தேதி** | **ஆவணங்களின் விபரங்கள்** |
|---|---|---|
| 1 | 25.06.2014 | ராமலிங்கம் அவர்களின் இறப்பு சான்றிதழின் உண்மை நகல் **பிவாசாஆ 1** ஆகவும், |
| 2. | 19.09.2013 | எனது தகப்பனார் ராமலிங்கம் அவர்களின் வாரிசு சான்றின் உண்மை நகல் **பிவாசாஆ 2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. |

அசல் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.